**உழவர்கரை நகராட்சி**
**புதுச்சேரி-5**

தேதி: 24-11-2021

**செய்தி குறிப்பு**

உழவர்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கால்நடை வளர்போரின் கவனத்திற்க்கு, கால்நடைகளை சாலையோரங்களில் கட்டப்படுவதாகவும், பொது இடங்களில் திரியவிடப்படுவதாகவும், பொதுமக்களிடமிருந்து தொடர்ந்து புகார்கள் நகராட்சிக்கு வந்த வண்ணம் உள்ளது. இப்படி கால்நடைகளை சாலைகளில் திரியவிடுவதால் போக்குவரத்திற்க்கு இடையூறு ஏற்பட்டு விபத்துக்கள் நிகழ்ந்து உயிரிழப்புகள் ஏற்படுகின்றது.

மேலும் கால்நடை வளர்க்கும் இடத்தினை சரியாக பராமரிக்காமலும், மாடுகளின் சானக்கழிவுகளை குடியிருப்புகளின் அருகிலேயே கொட்டிவைப்பதாலும், பொதுமக்கள் பயன்படுத்தும் கழிவுநீர் கால்வாயில் மாடுகளின் சானக்கழிவுகளை முழுவதும் விடுவதால் கால்வாய் நீரும், மழைநீரும் செல்லமுடியாமல் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுவதோடு நோய் தொற்று பரவும் ஆபத்து உள்ளது.

மேலும், புதுச்சேரி நகராட்சிகள் சட்டம் 1973, பிரிவு 345, 346, 347ன்- படி கால்நடை (மாடு, எருமை, ஆடு, பன்றி) வளர்போர் நகராட்சியிடம் அனுமதி / உரிமம் பெற்றிருக்க வேண்டும் என 03-09-2020 தேதியில் இந்நகராட்சி மூலம் தினநாளேடுகளில் அறிவிப்பில் அறிவுறுத்தப்பட்டது. அப்படி உரிமம் பெறாதவர்கள் / பெற விண்ணப்பிக்காதவர்கள் மீது மேற்படி சட்டப் பிரிவுகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் கால்நடைகளை வளர்ப்போர் நகராட்சியில் உரிமம் பெற்று தங்களுக்கு சொந்தமான இடத்திலேயே சுகாதாரமான முறையில் வளர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். தவறும்பட்சத்தில் தங்கள் கால்நடைகளை பிடிக்கப்பட்டு/ பறிமுதல் செய்து நகராட்சி பட்டியில் அடைக்கப்படும். பராமறிப்பு செலவினங்களுக்குகாக கால்நடைக்கு நாள் ஒன்றிர்க்கு ரூ.4280 என்று முதல் மூன்று நாட்களுக்கு அபராதம் விதிக்கப்படும். மூன்று நாட்களுக்கு பிறகு மாடுகளை ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கப்படுகிறது.

**(ஆ.சுரேஷ்ராஜ்)**
**ஆணையர்**
**உழவர்கரை நகராட்சி**

---

மேற்படி செய்தியை தங்கள் பத்திரிக்கையில் வெளியிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**ஆணையர்**
**உழவர்கரை நகராட்சி**